# இடைக்கால வரவு–செலவுத் திட்டம் 2016–2017 சிறப்பம்சங்கள்

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன்மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்

(குறள் 388)

**திட்டம் மற்றும் வளர்ச்சி**

✓ 2015–2016 ஆம் நிதியாண்டின் இறுதியில், ஒட்டுமொத்த திட்ட இலக்கான 1,70,888 கோடி ரூபாயை தமிழ்நாடு எட்டும்.

✓ ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவில், ஒட்டுமொத்த திட்டச் செலவு 2,31,498 கோடி ரூபாய் அளவை எட்டி, 12 ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட ஒட்டுமொத்தச் செலவு இலக்கான, 2.11 இலட்சம் கோடி ரூபாய் அளவை நமது மாநிலம் தாண்டும்

✓ 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2015–2016 ஆம் ஆண்டு காலத்திற்கான, சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு மாநில மொத்த உற்பத்தியின் வளர்ச்சி விகிதம், நிலையான விலைகளின் அடிப்படையில், 8.01 சதவீதத்தை எட்டியுள்ளது.

✓ தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்திற்கு 2,000 கோடி ரூபாயும், திட்ட வடிவமைப்பு நிதியத்திற்கு 200 கோடி ரூபாயும் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ 2014–2015 ஆம் ஆண்டில், புது முயற்சிகளை ஊக்குவிக்கும் மையமாக தமிழ்நாட்டை உருவாக்குவதற்காக, 150 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் 'தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டம்'.

✓ தமிழகத்திற்குள் சமூகப் பொருளாதாரக் குறியீடுகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைச் சரிசெய்ய, 2012–2013 ஆம் ஆண்டிலிருந்து, ஆண்டுதோறும் 100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில், ஒரு புது முயற்சியாக 'மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியம்'.

✓ ஆண்டிற்கு 75 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி, 'சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்' என்ற புதிய திட்டம்.

**வறுமை ஒழிப்பு**

✓ 95 வட்டாரங்களில் புதுவாழ்வுத் திட்டத்தின் தொடர்ச்சியாக, 'தமிழ்நாடு கிராமப்புற புதுவாழ்வுத் திட்டத்தை' செயல்படுத்த, 900 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்க உலக வங்கி முன்வந்துள்ளது.

✓ சுய உதவிக் குழுக்களை அடிப்படையாகக் கொண்டு, 12,524 பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் 840 பொது வாழ்வாதாரக் குழுக்கள் அமைக்கப்பட்டு, கடந்த நான்கு ஆண்டுகளில் 6,356 கோடி ரூபாய் சேமிப்பு செய்துள்ளதுடன், 25,785 கோடி ரூபாய் கடன் தொகை பெற்றுள்ளன.

✓ 3,04,690 இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி அளிக்கப்பட்டு 2,61,784 நபர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இதுவரையில், 414 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 1,13,881 இளைஞர்கள் தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

✓ 2014–2015 மற்றும் 2015–2016 ஆம் ஆண்டுகளுக்கு, முறையே 'தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு' 85.86 கோடி ரூபாயும், 172.45 கோடி ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

✓ இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்காக 250 கோடி ரூபாயும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்காக 100 கோடி ரூபாயும் ஒதுக்கீடு.

**திறன் மேம்பாடு**

✓ மாநில திறன் மேம்பாட்டு இயக்கம் இதுவரை, 146.22 கோடி ரூபாய் செலவில் 2,89,721 நபர்களுக்கு திறன் பயிற்சி அளித்துள்ளது.

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில், இந்த அரசு 142.40 கோடி ரூபாய் செலவில் 23 புதிய அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களை அமைத்துள்ளதோடு, 10.16 கோடி ரூபாய் செலவில் 47 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களில், மொழி மற்றும் மென்திறன் வளர்க்கும் ஆய்வுக் கூடங்களையும் இந்த அரசு தொடங்கியுள்ளது.

✓ திறன் மேம்பாட்டு இயக்கத்திற்காக இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்மொழி வளர்ச்சி**

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில், தமிழ்மொழி வளர்ச்சித்துறைக்காக 175 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து பல்வேறு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

✓ தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் புதிய கட்டடங்கள் மற்றும் கல்விசார் திட்டங்கள், சென்னையிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் புதிய நிர்வாகக் கட்டடம் மற்றும் பழந்தமிழர் வாழ்க்கை முறையினை எடுத்துக்காட்டும் கலைக்கூடம், மதுரையில் சங்ககாலக் கலைகளுக்கான அருங்காட்சியகம், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தொல்காப்பியர் அமர்வு ஆகிய முயற்சிகளுக்கு, மொத்தம் 90.04 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

✓ பழந்தமிழரின் கட்டடக் கலையை பிரதிபலிக்கும் வகையில், 37.25 கோடி ரூபாய் செலவில் மதுரையிலுள்ள உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு ஒரு மாபெரும் வளாகம் அமைக்கப்பட்டுள்ளது.

✓ தமிழ்மொழி வளர்ச்சிக்காக இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 32.74 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மகாமகம் திருவிழா**

✓ இத்திருவிழா சிறப்பான முறையில் நடைபெற அனைத்து முன்னேற்பாடுகளையும், பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்துள்ளதோடு, பல்வேறு அடிப்படை வசதிகளை மேம்படுத்த 135.38 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**சட்டம் ஒழுங்கு**

✓ 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல், இந்த அரசு, 39 சிறப்பு நில அபகரிப்புத் தடுப்புப் பிரிவுகளை அமைத்து, 3,642 கோடி ரூபாய் மதிப்பிலான நிலங்களை இதுவரை மீட்டுள்ளது.

✓ காவல் துறைக்கு 12,093 கூடுதல் பணியிடங்களுக்கு ஒப்புதல் அளித்து காவலர்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது.

✓ கடந்த ஐந்தாண்டுகளில் 32 புதிய காவல் நிலையங்கள், 47 புதிய போக்குவரத்துக் காவல் நிலையங்கள், நான்கு புதிய காவல் கோட்டங்கள் இந்த அரசால் உருவாக்கப்பட்டுள்ளன. இது தவிர, 11,496 காவலர் குடியிருப்புகள், 290 காவல் நிலையங்கள், 160 பிற காவல் துறை கட்டடங்கள் என கட்டமைப்பு வசதிகளை 1,205.62 கோடி ரூபாய் செலவில் இந்த அரசு மேம்படுத்தியுள்ளது.

✓ இவர்களில் 8,500 நபர்கள் இரண்டாம் நிலைக் காவலர்களாகத் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 2015 ஆம் ஆண்டில், 1,078 உதவி ஆய்வாளர்கள் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, காவல் துறையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

✓ 2016–2017ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 6,099.88 கோடி ரூபாயை காவல் துறைக்கு இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்**

✓ கடந்த ஐந்தாண்டுகளில், திறமை மிக்க தீயணைப்புப் படை வீரர்கள், 60,204 உயிர்களை மீட்டு, 1,858.56 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான சொத்துக்களை அழிவிலிருந்து காப்பாற்றியுள்ளனர்.

✓ இந்த இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்துறைக்கு 227 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**சிறைச்சாலைகள்**

✓ 2011–2012 ஆம் ஆண்டு முதல், சிறைச்சாலைகள் துறைக்கு மொத்தமாக 1,026.50 கோடி ரூபாயை ஒதுக்கியதுடன், இந்த இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் 281.28 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கியுள்ளது.

**நீதி நிர்வாகம்**

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில், 22 கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள், 18 குடும்ப நீதிமன்றங்கள் மற்றும் 11 விரைவு நீதிமன்றங்கள் (Fast Track Courts) உட்பட 216 புதிய நீதிமன்றங்களை இந்த அரசு நிறுவியுள்ளது.

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில், 772 கோடி ரூபாய் செலவில் நீதிமன்றங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டுவதற்கும், கூடுதல் பணியிடங்கள் தோற்றுவிப்பதற்கும், பிற கட்டமைப்பு வசதிகளை அமைப்பதற்கும் இந்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

✓ நீதி நிர்வாகத் துறைக்கு 2016–2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 985.51 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நிர்வாக ஆளுமை**

✓ மாநிலத்தில் உள்ள அனைத்து நகர்ப்புர, கிராமப்புறப் பகுதிகளிலும், அரசின் சேவைகள் மக்களை எளிதில் சென்றடைய, 10,000–க்கும் மேலான இ–சேவை மையங்களை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது

✓ இச்சேவை மையங்களின் மூலமாக 1.5 கோடிக்கும் மேலான மக்கள், அரசு சேவைகளைப் பெற்று பயனடைந்துள்ளனர்.

✓ தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், வட்டாட்சியர் அலுவலக வளாகங்களில் 269 இ–சேவை மையங்களை அமைத்துள்ளது. இந்நிறுவனம், பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட்ட நகர்ப்புரப் பகுதிகளில் மேலும் 400 இ–சேவை மையங்களை அமைத்துள்ளது.

✓ புதுமையான அம்மா திட்டத்தின் மூலமாக, இந்த அரசு கடந்த மூன்று ஆண்டுகளில், 50.50 இலட்சம் கோரிக்கை மனுக்களின் மீது நடவடிக்கை எடுத்துள்ளது.

✓ மக்களின் குறைகளைத் தீர்க்கும் மேலும் ஒரு முயற்சியாக, ''1100'' என்ற இலவசத் தொலைபேசி எண்ணைக் கொண்டு, ''24 மணி நேரமும் செயல்படும் அம்மா அழைப்பு மையம்'' இந்த அரசால் தொடங்கப்பட்டுள்ளது.

**வருவாய் நிர்வாகம்**

✓ கடந்த ஐந்தாண்டுகளில் ஒன்பது புதிய வருவாய் கோட்டங்களையும், 65 புதிய வட்டங்களையும் இந்த அரசு உருவாக்கியுள்ளது.

✓ மூன்று மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களையும், நான்கு மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு கூடுதல் கட்டடங்களையும், ஆறு கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்களையும், 64 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்களையும், 400 வருவாய்த் துறைக்கான இதர கட்டடங்களையும் 410.99 கோடி ரூபாய் செலவில் அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், 8,000 கிராம நிர்வாக அலுவலகங்களையும் புதுப்பித்துள்ளது.

✓ கடந்த ஐந்தாண்டுகளில், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமாக, 3,032 கோடி ரூபாய் அளவில் 37.52 இலட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்காக இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 205.99 கோடி ரூபாய் ஒதுக்கீடு .

✓ வருவாய்த் துறைக்கு மொத்தமாக 5,974 கோடி ரூபாய் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**பேரிடர் நிவாரணம்**

✓ வெள்ளத்தால் வீடுகள் இழந்த மற்றும் வீடுகள் சேதமடைந்த 5,25,121 குடும்பங்களுக்கு 282.91 கோடி ரூபாயும்,

வீடுகளில் வெள்ளம் புகுந்து பாதிக்கப்பட்ட 25,52,572 குடும்பங்களுக்கு 1,276.28 கோடி ரூபாயும் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

✓ 3.82 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் பயிர்கள் பாதிக்கப்பட்ட 4,81,975 விவசாயிகளுக்கு 451.16 கோடி ரூபாய் பயிர் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.

✓ 595.82 கோடி ரூபாய் செலவில் பொதுக் கட்டமைப்பு வசதிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை உடனடியாக சரிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

✓ ஒட்டுமொத்தமாக, 3,039.24 கோடி ரூபாய் வெள்ள நிவாரணத்திற்காகவும், மறுசீரமைப்புப் பணிகளுக்காகவும் இந்த அரசு வழங்கியுள்ளது. தேசியப் பேரிடர் நிவாரண நிதியத்திலிருந்து 1,773.78 கோடி ரூபாயை மத்திய அரசு தமிழகத்திற்கு வழங்கியுள்ளது.

✓ மாநிலப் பேரிடர் நிவாரண நிதியத்திற்கு 2016–2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 713 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வேளாண்மை**

✓ குறித்த நேரத்தில், தரம் வாய்ந்த விதைகள் விவசாயிகளைச் சென்றடைவதற்காக, 25 கோடி ரூபாய் தொடக்க நிதியுடன் தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை

✓ விவசாயிகளும், நுகர்வோரும் பயன்பெறும் வகையில், 5 மாநகராட்சிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் 51 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் 'பெருநகர காய்கறித் தொகுப்பு வளர்ச்சித் திட்டம்'

✓ நுண்ணீர்ப் பாசனம் அனைத்துப் பண்ணைகளுக்கும் சென்றடைய, குறு, சிறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், பிற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கி, கடந்த ஐந்து ஆண்டுகளில் 986.38 கோடி ரூபாய் செலவில் 1,76,390 ஹெக்டேரில் நுண்ணீர்ப் பாசனம்

✓ பண்ணை இயந்திரமயமாக்கலை பெரிய அளவில் ஊக்குவிக்க, கடந்த ஐந்து ஆண்டுகளில், 201.94 கோடி ரூபாய் செலவில் டிராக்டர்கள், உழவு மற்றும் பயிர் அறுவடை இயந்திரங்கள் உள்ளிட்ட 62,735 கருவிகள் வழங்கியது

✓ வட்டார அளவில், 150 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வரும் 100 ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள்

✓ 2015–2016 ஆம் ஆண்டில் நெல் கொள்முதலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை, சன்ன இரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றிற்கு 1,450 ரூபாய் எனவும், சாதாரண இரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றிற்கு 1,410 ரூபாய் எனவும் மத்திய அரசு நிர்ணயித்துள்ளபோதிலும், இவற்றை, முறையே 1,520 ரூபாயாகவும், 1,460 ரூபாயாகவும் உயர்த்தி தமிழக அரசு வழங்கியுள்ளது.

✓ டன் ஒன்றிற்கு, 2,300 ரூபாய் என கரும்பிற்கான நியாயமான ஆதாய விலை மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ள

போதிலும், போக்குவரத்துச் செலவு உள்ளிட்ட மாநில அரசின் பரிந்துரை விலையை, டன் ஒன்றிற்கு 2,850 ரூபாய் என உயர்த்தி தமிழக அரசு நிர்ணயம் செய்துள்ளது.

✓ வேளாண்மைத் துறைக்கு 2010–2011 ஆம் ஆண்டில் 2,072.43 கோடி ரூபாயாக இருந்த நிதி ஒதுக்கீட்டை, 2015–2016 ஆம் ஆண்டில் 6,503.40 கோடி ரூபாயாக உயர்வு.

✓ தேசிய தோட்டக்கலை இயக்கத்திற்கு 123 கோடி ரூபாயும், பண்ணை இயந்திரமயமாக்கல் திட்டத்திற்கு 100 கோடி ரூபாயும் உட்பட, வேளாண் துறைக்கு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மொத்தமாக 6,938.57 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கீடு.

**கூட்டுறவு**

✓ 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை, 22,486 கோடி ரூபாயை குறுகிய கால பயிர்க்கடனாக விவசாயிகளுக்குக் கூட்டுறவு வங்கிகள் வழங்கியுள்ளன.

✓ கடன்களை தவணை தவறாது திரும்பச் செலுத்துவதை ஊக்குவிக்க, வட்டியில்லாத பயிர்க்கடன் வழங்க வட்டி மானியமாக, 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து 755.23 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

✓ 2011–2012 ஆம் ஆண்டு முதல் இதுவரை, 5,10,600 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 3,879 சேமிப்புக் கிடங்குகளை 489.63 கோடி ரூபாய் செலவில் கட்ட நடவடிக்கை.

✓ தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் 23 மத்திய கூட்டுறவு வங்கிகளிலும், மைய வங்கியியல் தீர்வு முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது

**கால்நடை பராமரிப்பு**

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில், 25 மாவட்டங்களில் 97.35 கோடி ரூபாய் செலவில் 3,014 பிராய்லர் கோழிப் பண்ணைகளும், 10,195 நாட்டுக் கோழிப் பண்ணைகளும் அமைக்கப்பட்டுள்ளது.

✓ விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 231.11 கோடி ரூபாய் செலவில் 60,000 பயனாளிகளுக்கு 60,000 விலையில்லா கறவைப் பசுக்களையும், 927.75 கோடி ரூபாய் செலவில் ஏழு இலட்சம் பெண்களுக்கு 28 இலட்சம் வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகளையும் இந்த அரசு வழங்கியுள்ளது. இதன் பயனாக, 70,994 பசுங்கன்றுகளையும், 42.95 இலட்சம் ஆட்டுக் குட்டிகளையும் கூடுதல் சொத்தாக பயனாளிகள் பெற்றதோடு, நாளொன்றுக்கு 2.6 இலட்சம் லிட்டர் அளவிற்கு பால் உற்பத்தி உயர்வு.

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில், 593.65 கோடி ரூபாய் மொத்த முதலீட்டில் பால்வளத் துறையின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது.

✓ கால்நடை மருத்துவத் துறைக்கான கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக, 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து 422.37 கோடி ரூபாய் செலவில் 200 புதிய துணை மையங்களையும், 20 புதிய கால்நடை மருந்தகங்களையும்

அமைத்ததோடு, 810 துணை மையங்களை கால்நடை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

✓ கால்நடைத் துறைக்கு, 2006–2007 முதல் 2010–2011 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், 1,437.25 கோடி ரூபாயாக இருந்த வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீட்டினை, முன்பு எப்போதும் இல்லாத அளவாக, கடந்த ஐந்து ஆண்டுகளில், மூன்று மடங்கிற்கு மேல் உயர்த்தி, 4,826.67 கோடி ரூபாயாக இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. கால்நடைப் பராமரிப்புத் துறைக்காக 1,188.88 கோடி ரூபாய் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில், பால்வளத் துறைக்கு 643.37 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பால்வளத் துறைக்காக 119.62 கோடி ரூபாயும் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மீனளம்**

✓ 2011 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதுவரை, இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட 357 மீன்பிடி படகுகளுடன் 2,271 தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

✓ அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு, 2011 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதுவரை, 1,100 கோடி ரூபாய்க்கும் மேலாக நிதி ஒதுக்கீடு.

✓ சூரை மீன்பிடி தூண்டில் படகுகளைப் பயன்படுத்தி ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்கும் வகையில் 51.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம்.

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில், மீனவர் குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கான உதவித் தொகையாக, மீன்பிடி தடைக் காலத்தில் 507.57 கோடி ரூபாயும், மீன்பிடி குறைவாக உள்ள காலங்களில் 309.17 கோடி ரூபாயும், இத்திட்டங்களுக்காக, இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 183 கோடி ரூபாயும் ஒதுக்கீடு .

✓ 2006–2011 ஆம் ஆண்டு காலத்தில், 538.60 கோடி ரூபாயாக இருந்த மீன்வளத் துறைக்கான ஒதுக்கீடு, கடந்த ஐந்து ஆண்டுகளில், 2,335.20 கோடி ரூபாயாக உயர்த்தியுள்ளது. 2010–2011 ஆம் ஆண்டில் 146.07 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீட்டினை, முன் எப்போதும் இல்லாத அளவிற்கு உயர்த்தி, 2016–2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 742.99 கோடி ரூபாயாக ஒதுக்கீடு.

**சுற்றுச்சூழல் மற்றும் வனம்**

✓ கடந்த நான்கு ஆண்டுகளில், 175.89 கோடி ரூபாய் செலவில் 2.62 கோடி மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. மேலும், 61.68 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் 68 இலட்சம் மரக் கன்றுகள் நடும் பணி நடந்து வருகிறது.

✓ ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் உதவியுடன் 686 கோடி ரூபாய் செலவில், 2011–2012 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ‘தமிழ்நாடு பல்லுயிரினப் பாதுகாப்பு மற்றும் பசுமைத் திட்டம்’ 2018–2019 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதுவரை,

இத்திட்டத்திற்காக 286 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

✓ சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறைக்காக இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 677.93 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

**நீர்வள ஆதாரங்கள் மற்றும் பாசனம்**

✓ உலக வங்கி உதவியோடு அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தை 745.49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2012–2013 ஆம் ஆண்டிலிருந்து இந்த அரசு தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில், இத்திட்டத்திற்காக 408 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

✓ காவேரி டெல்டா பகுதியில், பருவநிலை மாறுதல்களை எதிர்கொள்ளும் திட்டத்தை வடிவமைத்து, ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியையும் இந்த அரசு வெற்றிகரமாகப் பெற்றுள்ளது. வெண்ணாறு உப வடிநிலப் பகுதியில் 960.66 கோடி ரூபாய் செலவில் இத்திட்டப் பணிகளை, இந்த அரசு முதற்கட்டமாக மேற்கொண்டுள்ளது. இதற்காக இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 398.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

✓ இது தவிர, 61 உப வடிநிலப் பகுதிகளில் 2,674.80 கோடி ரூபாய் செலவில், நீர்வள நிலவளத் திட்டத்தின் முதல் கட்டப் பணிகள், உலக வங்கி உதவியுடன் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு, 2015 ஆம் ஆண்டு ஜுன் மாதம் நிறைவு செய்யப்பட்டன.

✓ 2,950 கோடி ரூபாய் செலவில், முதல் கட்டத்தில் பணிகள் மேற்கொள்ளப்படாத உப வடிநிலப் பகுதிகளில், உலக வங்கி உதவியோடு நீர்வள நிலவளத் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

✓ அத்திக்கடவு – அவினாசி திட்டத்தை 1,862 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை 2011 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது. பில்லூர் அருகில் பவானி ஆற்றிலிருந்து 2,000 கன அடி வெள்ள உபரி நீரை எடுத்து, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களிலுள்ள 31 பொதுப்பணித் துறை ஏரிகள், 40 ஊராட்சி ஒன்றியக் குளங்கள் மற்றும் ஏனைய 538 நீர்நிலைகளில் நிரப்புவதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

✓ கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தின் காண்டூர் கால்வாயைப் புனரமைப்பதற்கான பணிகளை 221.15 கோடி ரூபாய் செலவில் பணிகள் நிறைவு.

✓ 2011 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதுவரை, ஏரிகள், அணைக்கட்டுகள், வாய்க்கால்கள், பாலங்கள் மற்றும் தடுப்பணைகளை அமைப்பதற்காகவும், புனரமைப்பதற்காகவும், 1,532.87 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 206 திட்டங்களை நபார்டு வங்கியின் உதவியோடு இந்த அரசு மேற்கொண்டுள்ளது. இவற்றுள், 577.45 கோடி ரூபாய் மதிப்பிலான 91 திட்டங்கள் ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளன.

✓ 2006–2011 ஆம் ஆண்டில், 7,113.11 கோடி ரூபாயாக இருந்த நீர்வள ஆதாரத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டை, 2011–2016 ஆம் ஆண்டில் 14,408.80 கோடி ரூபாயாக இந்த அரசு உயர்த்தி வழங்கியுள்ளது. இந்த இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 3,673.91 கோடி ரூபாய் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பொது விநியோகத் திட்டம்**

✓ அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய முன்னோடி பொது விநியோகத் திட்டத்தின் கீழ், 1.91 கோடி அரிசி அட்டைகள் உள்ளிட்ட 2.02 கோடி குடும்ப அட்டைகள் இன்றளவில் புழக்கத்தில் உள்ளன.

✓ கிலோ ஒன்றிற்கு 13.50 ரூபாய் என்ற மானிய விலையில் மாதந்தோறும் சுமார் 36,500 டன் சர்க்கரை தொடர்ந்து வழங்கல்.

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில், உணவு மானியமாக 25,000 கோடி ரூபாயும், பொது விநியோகத்திட்ட கடைகளை நடத்துவதற்காக கூட்டுறவு அமைப்புகளுக்கு அளிக்கப்படும் நிர்வாக மானியமாக 762.93 கோடி ரூபாய் .

✓ உணவு மானியத்திற்காக இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 5,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ விவசாயிகளையும் நுகர்வோரையும் நேரடியாக இணைப்பதற்காக 71 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள்

✓ பொருட்களை வாங்கி அடக்க விலையில் விற்பதற்காக 100 கோடி ரூபாய் அளவிலான விலை கட்டுப்படுத்தும் நிதியம்

✓ மாநகரங்கள் மற்றும் நகர்ப்புரப் பகுதிகளில் 530 அம்மா உணவகங்கள்

✓ நியாயமான விலையில் மருந்துகளை விற்பதற்காக 106 அம்மா மருந்தகங்கள்

✓ அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா சிமெண்ட் போன்ற புதுமையான திட்டங்கள்

**நெடுஞ்சாலைத் துறை**

✓ 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல், சாலைக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக, ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 14,841 கோடி ரூபாய் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்காக இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,800 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ நபார்டு வங்கியின் உதவியோடு, 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து 1,184.84 கிலோ மீட்டர் சாலை மேம்பாட்டுப் பணிகளும், 914 பாலப் பணிகளும், 2,563.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

✓ திருமங்கலம் மற்றும் மூலக்கடை சந்திப்பில் உள்ள பாலம், முடிச்சூர்–ஸ்ரீபெரும்புதூர் சாலையில் உள்ள பாலம் ஆகியன உள்ளிட்ட, பல பாலப் பணிகள் சென்னை பெருநகர்ப் பகுதியில்

**1,195.35** கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

✓ விரிவுபடுத்தப்பட்ட சென்னை மாநகராட்சிப் பகுதிகளில், சாலை அகலப்படுத்துதல் மற்றும் நடைபாதைகள், வடிகால்கள் போன்றவற்றை அமைப்பதற்கான பணிகள் **400** கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

✓ இரயில்வே பணிகள் திட்டத்தின் கீழ், **1,116.94** கோடி ரூபாய் மதிப்பீட்டிலான **52** இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப் பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

✓ தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில், **2,653** கோடி ரூபாய் மதிப்பீட்டிலான **12** சாலைப் பணிகள் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்காக, இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **1,220.28** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ மதுரை மாநகரத்திற்கான நான்கு வழித்தட வெளிவட்டச் சாலையை, **213.69** கோடி ரூபாய் மதிப்பீட்டில் வடிவமைத்து, இதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் இறுதி செய்யப்பட உள்ளன.

✓ ஓரகடம் தொழில் பகுதி வழித்தடத் திட்டம் **961.29** கோடி ரூபாய் செலவில் விரைவாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிழக்கு கடற்கரைச் சாலையை நான்கு வழித்தடச் சாலையாக்கும் பணிகள் **314.15** கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன.

✓ நெடுஞ்சாலைத் துறைக்காக இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **8,486.26** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**எரிசக்தி**

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில் புதிய திட்டங்களைச் செயல்படுத்தியதன் மூலமாக **4,455.50** மெகாவாட் உற்பத்தித் திறனும், நடுத்தர கால மற்றும் நீண்ட கால மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் மூலமாக **3,030** மெகாவாட் உற்பத்தித் திறனும் கூடுதலாகச் சேர்க்கப்பட்டு, **31.12.2015** அன்றைய நிலவரப்படி, மாநிலத்தின் மின் உற்பத்தித்திறன் **26,806.50** மெகாவாட் அளவை எட்டியது.

✓ **8.7.2015** அன்று, இதுவரை மிக உயர்ந்த மின்தேவை அளவான **303.04** மில்லியன் யூனிட்டுகள் தடையின்றி முழுமையாக விநியோகிக்கப்பட்டன. **2010–2011** ஆம் ஆண்டில் **1,040** யூனிட்டுகளாக இருந்த ஓர் ஆண்டிற்கான சராசரி தனிநபர் மின் நுகர்வு **2014–2015** ஆம் ஆண்டில் **1,228** யூனிட்டுகளாக உயர்ந்துள்ளது

✓ **1 x 660** மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் விரிவாக்கப்பட்ட அனல் மின் உற்பத்தித் திட்டம், **2 x 660** மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல மின் உற்பத்தித் திட்டம், **1 x 800** மெகாவாட் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் உற்பத்தித் திட்டத்தின் மூன்றாவது நிலை ஆகியவற்றிற்கான கட்டமைப்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம்

மாவட்டத்தில் 2 x 800 மெகாவாட் திறன் கொண்ட உப்பூர் அனல் மின் உற்பத்தித் திட்டம் மற்றும் 5 x 800 மெகாவாட் திறன் கொண்ட கடலாடி அனல் மின் உற்பத்தித் திட்டம், தூத்துக்குடி மாவட்டத்தில் 2 x 660 மெகாவாட் திறன் கொண்ட உடன்குடி அனல் மின் உற்பத்தித் திட்டம், 1 x 660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் மாற்று அனல் மின் உற்பத்தித் திட்டம், 4 x 125 மெகாவாட் திறன் கொண்ட குந்தா நீர் மின் உற்பத்தித் திட்டம் மற்றும் 4 x 500 மெகாவாட் திறன் கொண்ட சில்லஹல்லா நீர் மின் உற்பத்தி நிலையம் ஆகியவற்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

✓ மின்கடவுக் கட்டமைப்பிற்கு இந்த அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருவதால், 4,010 கோடி ரூபாய் செலவில் 7,452 சுற்று கிலோ மீட்டர் நீளமுள்ள உயர் மின்னழுத்த வழித்தடங்களோடு கூடிய 252 புதிய துணை மின் நிலையங்களை நிறுவப்பட்டுள்ளது.

✓ ஜெர்மனி பன்னாட்டு நிறுவனத்தின் (KfW) நிதியுதவியோடும், மத்திய அரசின் 40 சதவீத மானியத்தோடும் 1,593 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பசுமை ஆற்றல் மின்தொடர் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் உதவியுடன் 5,014 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் 'தமிழ்நாடு மின்தொடரமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கான' பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில், மாநிலத்தின் மின்கடவுக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக மட்டும் 9,639.36 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

✓ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான நிறுவனத்தின் நிதிநிலையை மேம்படுத்துவதற்காக, நிதி சீரமைப்புத் திட்டத்தில் 2012–2013 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் 6,353 கோடி ரூபாய் அளவிலான குறுகியகாலக் கடன்களுக்கு அரசே பொறுப்பேற்றுக் கொண்டது.

✓ 2010–2011 ஆம் ஆண்டில் 287.12 கோடி ரூபாயாக இருந்த விவசாயத்திற்கான இலவச மின்சார மானியம், 2015–2016 ஆம் ஆண்டில் 3,319.30 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

✓ 2011 ஆம் ஆண்டு மே திங்கள் முதல், 15,111.74 கோடி ரூபாயை பங்கு மூலதன உதவியாகவும், 9,694.26 கோடி ரூபாயை கடனாகவும் இந்த அரசு வழங்கியுள்ளது.

✓ 2016–2017 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மின்சார மானியமாக 7,370.33 கோடி ரூபாயும், பங்கு மூலதன உதவியாக 2,000 கோடி ரூபாயும், கடனுதவியாக 1,483 கோடி ரூபாயும் உட்பட ஆகமொத்தம் மின் துறைக்கு 13,819.03 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**போக்குவரத்து**

✓ மாநில அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் இயக்கும் சேவைத் தடங்களின் எண்ணிக்கை, 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிலவரப்படி, 20,739 ஆக உயர்ந்துள்ளது. இதனால், சராசரியாக நாளொன்றுக்கு

93.85 இலட்சம் கிலோ மீட்டர் தூரத்திற்கு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

✓ சென்னை மாநகரப் பகுதிகளில் இயக்கப்படும் சிறு பேருந்துகளை உள்ளிட்டு, கடந்த ஐந்து ஆண்டுகளில், 1,510 புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

✓ 2011 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதுவரை, மாணவ மாணவியர் பயணக் கட்டண மானியமாக 2,276 கோடி ரூபாயும், டீசல் மானியமாக 1,800 கோடி ரூபாயும், பங்கு மூலதன உதவியாக 1,190 கோடி ரூபாயும், கடனுதவியாக 1,015 கோடி ரூபாயும், ஆகமொத்தம் 6,281 கோடி ரூபாயை நிதியுதவி.

✓ இதுதவிர, மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுக்கான வைப்பு நிதி 110 கோடி ரூபாயும்.

✓ வரும் நிதியாண்டில் போக்குவரத்துத் துறைக்கு 1,590 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தகவல் தொழில்நுட்பவியல் துறை**

✓ 2011–2012 ஆம் ஆண்டில் 4.94 இலட்சமாக இருந்த தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சந்தாதாரர் எண்ணிக்கை தற்போது 70.52 இலட்சமாக உயர்ந்துள்ளது.

✓ தகவல் தொழில்நுட்பவியல் துறைக்காக 2016–2017 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 135.29 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**தொழில் வளர்ச்சி**

✓ உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலம் 4.70 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில் 2.42 இலட்சம் கோடி ரூபாய் அளவிலான தொழில் முதலீடுகளை ஈர்க்க வழிவகை ஏற்பட்டுள்ளது.

✓ கோயம்புத்தூரில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் 55 கோடி ரூபாய்

மதிப்பீட்டில் தமிழ்நாடு உயிரி தொழில் பூங்கா–III (TICEL) அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

✓ திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டத்தில் 700 கோடி ரூபாய் செலவில், கனரகத் தொழில் உதிரிப் பாகங்களை உற்பத்தி செய்வதற்கான உற்பத்தி மையத்தையும், பொன்னேரி வட்டத்தில் உள்ள வயலூரில் 264 கோடி ரூபாய் செலவில் பாலிமர் தொழிற் பூங்காவையும் அமைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை**

✓ கடந்த அரசின் ஐந்தாண்டு கால ஆட்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு 15,906 கோடி ரூபாய். ஆனால், இந்த அரசின் ஐந்து ஆண்டுக் காலத்தில் 91,210 கோடி ரூபாய் அளவிலான புதிய முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில், முதலீட்டு மானியம், மின் கட்டண மானியம் போன்ற பல்வேறு மானிய உதவிகளாக,

442.73 கோடி ரூபாயை 22,169 தொழில் அலகுகளுக்கு இந்த அரசு வழங்கியுள்ளது.

✓ உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்போது, இத்துறையில், 16,532.67 கோடி ரூபாய் அளவிற்கு 10,073 தொழில் முனைவோர், அடுத்த இரண்டு ஆண்டுகளில் முதலீடு செய்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளனர். இதில், 1,529.88 கோடி ரூபாய் முதலீட்டில் 1,458 தொழில் முனைவோர்கள் இதுவரை உற்பத்தியைத் தொடங்கியுள்ளனர்.

✓ 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இதுவரை, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தால் 1,859 கோடி ரூபாய் அளவிலான கடன்கள் வழங்கப்பட்டுள்ளதன் மூலம், 4,237 தொழில் அலகுகள் இந்த வட்டி மானியத்தால் பயன் பெற்றுள்ளன.

✓ புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் மேம்பாட்டுத் திட்டத்தின் (NEEDS) கீழ் 737.45 கோடி ரூபாய் முதலீட்டிலான 1,586 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைக்கு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 348.13 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை**

✓ இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 495.16 கோடி ரூபாய் விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்காகவும், 78.46 கோடி ரூபாய் தள்ளுபடி மானியத் திட்டத்திற்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ ஒருங்கிணைந்த கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் விற்பனை ஊக்கத்தொகையான 85.39 கோடி ரூபாயை மத்திய அரசு இதுவரை விடுவிக்கவில்லை. அந்த நிதியுதவியை எதிர்நோக்கி, மாநில பங்குத் தொகை உள்ளிட்ட, 126.25 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.

✓ நெசவாளர்களுக்கென 260 கோடி ரூபாய் செலவில் 10,000 பசுமை வீடுகள் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

✓ திருப்பூரில் கழிவுநீர் வெளியேறா தொழில்நுட்பத்தைப் (Zero Liquid Discharge) பயன்படுத்தும் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை தொடர்ந்து இயங்கச் செய்வதற்காக, 203.29 கோடி ரூபாய் வட்டியில்லாக் கடன் வழங்கப்படும். இதுவரை, 112.18 கோடி ரூபாய் இதற்கென விடுவிக்கப்பட்டுள்ளது.

**ஊரக வளர்ச்சி**

✓ தமிழ்நாடு கிராமப்புற குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (THAI) 2,31,874 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

✓ முதலமைச்சரின் ‘சூரியஒளி மின்வசதி கொண்ட பசுமை வீடுகள்’ திட்டத்தின் கீழ் கடந்த ஐந்து ஆண்டுகளில், 5,940 கோடி ரூபாய் செலவில் மூன்று இலட்சம் பசுமை வீடுகள்.

✓ இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 4,876 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4,41,637 வீடுகள் கட்ட நடவடிக்கை. இதற்காக,

கான்க்ரீட் கூரை அமைப்பதற்கான செலவு உள்ளிட்ட மாநில அரசின் பங்காக 3,010 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

✓ 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து, ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 497.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 48,020 பணிகள்.

✓ சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த ஐந்து ஆண்டுகளில் 2,180 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 77,960 பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 2016–2017 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்திற்காக 470 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ 2015–2016 ஆம் ஆண்டில், 1,827 கோடி ரூபாய் செலவில், 15.23 இலட்சம் வீடுகளில் கழிப்பிடங்கள் அமைக்கும் பணிகள்

✓ கிராமப் பகுதிகளை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரித்திட முதற்கட்டமாக 110 கோடி ரூபாய் செலவில் 2,000 கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகள். இப்பணிகள் மேலும் 7,000 கிராம ஊராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

✓ கிராமங்களை தூய்மையாகப் பராமரிக்க, 12,524 கிராம ஊராட்சிகளிலும், 44.10 கோடி ரூபாய் செலவில் 17,638 மூன்று சக்கர வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

✓ 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை, 20,742 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது நமது நாட்டிலேயே அதிக அளவாகும்.

✓ 2.2.2016 அன்று, 'முயற்சிகளை ஒருங்கிணைத்து வாழ்வாதாரத்தை நிலைக்கச் செய்வதற்கான சிறப்பு விருது' தமிழ்நாட்டிற்கு கிடைத்துள்ளது.

✓ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான 7,155 கோடி ரூபாய் ஒதுக்கீட்டையும் சேர்த்து, ஊரக வளர்ச்சித் துறைக்காக இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 18,503.80 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நகராட்சி நிர்வாகம்**

✓ நகர்ப்புரக் கட்டமைப்பு மேம்பாட்டிற்காக, விரிவுபடுத்தப்பட்ட சென்னை மாநகராட்சிக்கான 'சென்னைப் பெருநகர் வளர்ச்சி இயக்கம்' இதர மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கான 'ஒருங்கிணைந்த நகர்ப்புர மேம்பாட்டு இயக்கம்' போன்ற திட்டங்களை செயல்படுத்த, கடந்த ஐந்து ஆண்டுகளில், 6,250 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 13,688 பணிகள்.

✓ 'திறன்மிகு நகரங்கள்' திட்டத்தின் கீழ் 2015–2016 ஆம் ஆண்டிற்கு, சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளை மத்திய அரசு தேர்வு செய்துள்ளது.

✓ 'அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான திட்டத்தின்' (AMRUT) கீழ் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் 3,316.22 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள் மற்றும்

திறன்மிகு நகரங்கள் திட்டத்திற்காக 400 கோடி ரூபாயும், அம்ருத் திட்டத்திற்காக 500 கோடி ரூபாயும் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு.

✓ 'தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்' (TNSUDP) 3,831 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலக வங்கியின் உதவியோடு திட்டம். இத்திட்டத்தின் கீழ், 2,212.89 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 13 திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

✓ 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து, மாநிலத்தில் உள்ள 52 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் 3,500.89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடை திட்டப் பணிகள்.

✓ திடக்கழிவு மேலாண்மை நிதியத்திலிருந்து, ஐந்து மாநகராட்சிகள், 67 நகராட்சிகள் மற்றும் 291 பேரூராட்சிகளில் 319.24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு திட்டப் பணிகள்.

✓ திறந்த வெளியில் மலம் கழிப்பதை தமிழ்நாட்டில் அறவே அகற்றும் நோக்குடன், பொதுக் கழிப்பறைகளை அமைப்பதற்கும், அவற்றை சீரமைப்பதற்கும் 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை, 346.18 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு.

✓ தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் கிடைக்கப் பெற்ற 185.74 கோடி ரூபாய் நிதியும், மாநில அரசின் திட்டங்களோடு ஒன்றிணைக்கப்பட்டு நகர்ப்புரப் பகுதிகளில் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

✓ நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு 2016–2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 12,194.21 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

**குடிநீர் வழங்கல்**

✓ 2011 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து, சென்னை மாநகரத்தின் குடிநீர் வசதிகளை மேம்படுத்துவதற்காக 3,780.25 கோடி ரூபாயும், பிற நகர்ப்புரப் பகுதிகளுக்கு 3,102.60 கோடி ரூபாய் ஒதுக்கீடு மற்றும் 45 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் இதர குடிநீர்த் திட்டங்கள் 8,410.35 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

✓ குடிநீர்ப் பற்றாக்குறை உள்ள 69 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 30 பேரூராட்சிகள் ஆகியவற்றில் எதிர்மறை சவ்வூடு பரவல் நிலையங்கள் அமைத்து, குடிநீர் வழங்கும் பணிகள்.

✓ சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை ஏழைகளும் பருகிப் பயனடைய 'அம்மா குடிநீர்த் திட்டம்' என்ற ஒரு புதிய திட்டம். இதன்படி, முதல் கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏழை மக்கள் அதிகம் வசிக்கும் 100 தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் எதிர்மறை சவ்வூடு பரவல் மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நிலையங்கள் அமைக்கப்படும்.

✓ பொதுமக்களுக்கு விலையேதுமின்றி இந்த சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஒரு குடும்பத்திற்கு நாள் ஒன்றுக்கு 20 லிட்டர் என்ற அளவில் வழங்கப்படும். இதை, குடிநீர் சுத்திகரிப்பு தானியங்கி

நிலையத்திலிருந்து ஸ்மார்ட் கார்டு மூலம் மக்கள் பெற வழிவகை செய்யப்படும்.

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில், கிராமப்புறக் குடிநீர் வழங்கும் திட்டங்களின் கீழ், **5,911** கோடி ரூபாய் செலவில் **24,279** குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி வழங்குவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில், **15,145** குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்குவதற்கு **3,719** கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

✓ **2011** ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து குறைந்தபட்சத் தேவைகள் திட்டத்தின் கீழ் **1,093** கோடி ரூபாயும், **1,960** கோடி ரூபாய் மாநில அரசின் பங்குடன் தேசிய ஊரக குடிநீர்த் திட்டத்தின் கீழ் **3,768** கோடி ரூபாயும், கிராமப்புறக் குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக செலவிடப்பட்டுள்ளன.

✓ தேசிய ஊரக குடிநீர்த் திட்டத்திற்கு **2012–2013** ஆம் ஆண்டில் **536** கோடி ரூபாயாக இருந்த தமிழ்நாட்டிற்கான ஒதுக்கீட்டை, **2015–2016** ஆம் ஆண்டில் **102.65** கோடி ரூபாயாக மத்திய அரசு குறைப்பு.

✓ கிராமப்புறக் குடிநீர் வழங்கல் பணிகளுக்காக நபார்டு வங்கிக் கடன் மூலமாக **501.45** கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

✓ குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக **2016–2017** ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **1,802** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வு

✓ கடந்த ஐந்து நிதியாண்டுகளில், கிராமப்புற மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு முறையே, **20,537.51** கோடி ரூபாயும், **14,697.25** கோடி ரூபாயும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. மாநில அரசின் நிதிப் பகிர்விற்காக **2016–2017** ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **9,467.21** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ பதினான்காவது மத்திய நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி, நமது மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொதுவான அடிப்படை நிதியுதவியாக **2,406.14** கோடி ரூபாயும், பொதுவான செயல்பாட்டு நிதியுதவியாக **494.99** கோடி ரூபாயும், வரும் நிதி ஆண்டில் கிடைக்கும்.

## வீட்டு வசதி

✓ 'அனைவருக்கும் வீட்டு வசதி' திட்டத்தின் கீழ், தனி வீடுகள் மற்றும் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் உட்பட **34,013** குடியிருப்புகளை **1,411.58** கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் கட்டுவதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்பணிகளுக்கென, மத்திய அரசு **510.20** கோடி ரூபாயும், மாநில அரசு **685.86** கோடி ரூபாயும் வழங்கிட உள்ளன.

✓ 'அனைவருக்கும் வீட்டு வசதி' திட்டத்திற்காக **2016–2017** ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **689** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சென்னை மெட்ரோ இரயில் திட்டம்**

✓ சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு இதுவரை, மாநில அரசு **3,907.82** கோடி ரூபாயும், மத்திய அரசு **2,307.75** கோடி ரூபாயும் தங்களது பங்களிப்பாக வழங்கியுள்ளன. இத்துடன், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையும் (JICA) **7,008.41** கோடி ரூபாய் கடனுதவி அளித்துள்ளது.

✓ இரயில், பேருந்து, மெட்ரோ இரயில் போன்ற பல்வேறு போக்குவரத்து வசதிகளும் ஒருங்கிணைக்கப்படும் பன்முகப் போக்குவரத்து முனையமாக சென்னை மத்திய இரயில் நிலையத்தை உருவாக்க, **389.42** கோடி ரூபாய் நிதியுதவியை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

✓ மெட்ரோ இரயில் திட்டத்திற்காக இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **1,032.55** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மக்கள் நல்வாழ்வு**

✓ **2011** ஆம் ஆண்டு மே மாதம் முதல், **6,090** மருத்துவர்கள் உட்பட **14,707** பணியாளர்கள் மருத்துவத் துறையில் புதிதாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

✓ **2010–2011** ஆம் ஆண்டில் **4,663.64** கோடி ரூபாயாக இருந்த மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டை, **2015–2016** ஆம் ஆண்டில் **8,823.17** கோடி ரூபாயாக இந்த அரசு கணிசமாக உயர்த்தியுள்ளது.

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில் இத்துறைக்கு **34,042.90** கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இது, கடந்த அரசின் ஐந்தாண்டு ஆட்சிக்காலத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட **14,980.74** கோடி ரூபாயை விட **127** சதவீதம் அதிகமாகும். மக்கள் நல்வாழ்வுத் துறைக்காக இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **9,350.66** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ இந்த அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் 'மாண்புமிகு முதலமைச்சரின் விரிவுபடுத்தப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்' கீழ், இதுவரை, **2,852** கோடி ரூபாய் செலவில் **13.74** இலட்சம் நோயாளிகள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தில், அரசு மருத்துவமனைகளின் மிகச் சிறந்த செயல்பாட்டின் காரணமாக, **1,032** கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டு, இந்த நிதி மூலம் இம்மருத்துவமனைகளின் வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக **2016–2017** ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **928** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ **2011** ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதுவரை, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், **32.29** இலட்சம் கர்ப்பிணித் தாய்மார்கள் **3,016** கோடி ரூபாய் நிதியுதவி பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்காக **2016–2017** ஆம் ஆண்டிற்கு **668** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ தேசிய சுகாதார இயக்கத்திற்காக, 2016–2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,368 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ 1,634 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்நாடு நகர்ப்புர மருத்துவக் கட்டமைப்புத் திட்டத்திற்கான ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதியுதவிக்காக மத்திய அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

✓ 2011–2012 முதல், மொத்தமாக, 710 கூடுதல் மருத்துவப் படிப்பிற்கான இடங்களும், 64 கூடுதல் முதுகலை மருத்துவப் படிப்பிற்கான இடங்களும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

**பள்ளிக் கல்வி**

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த அரசு 86,193 கோடி ரூபாயை பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. 2016–2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்துறைக்கென 24,820 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில், 221 புதிய ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்கியுள்ளதோடு, 112 ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 810 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

✓ கடந்த மூன்று ஆண்டுகளில், 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு இலவச மற்றும் கட்டாயக் கல்விச் சட்ட விதிகளின்படி, பின்தங்கிய பிரிவுகளைச் சேர்ந்த 2,31,404 குழந்தைகளுக்கு, தனியார் பள்ளிகளில் பயிலும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

✓ 2013–2014 மற்றும் 2014–2015 ஆம் ஆண்டுகளுக்கு தனியார் பள்ளிகளில் பயிலும் இக்குழந்தைகளுக்கான கல்விக் கட்டணத்தை திருப்பி அளிப்பதற்காக, 97.05 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

✓ பத்தாவது மற்றும் பன்னிரெண்டாவது வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் தேர்ச்சி விகிதம் 2011 ஆம் ஆண்டில் 85.30 சதவீதம் மற்றும் 85.90 சதவீதமாக இருந்த நிலை மாறி, 2015 ஆம் ஆண்டில் முறையே, 92.90 சதவீதம் மற்றும் 90.60 சதவீதமாக குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்துள்ளது.

✓ பள்ளிகளில் தரமான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு 4,165.95 கோடி ரூபாய் ஒதுக்கீடு. அனைத்துப் பள்ளிகளிலும் போதிய குடிநீர் மற்றும் கழிவறை வசதிகளை வழங்குவதற்காக, நபார்டு வங்கியின் நிதியுதவியோடு 650.68 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில், அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கீழ் 6,124 கோடி ரூபாயும், தேசிய இடைநிலைக் கல்வி இயக்கத்தின் கீழ் 2,069 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளன. 2016–2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அனைவருக்கும் கல்வி இயக்கத்திற்காக 2,329.15 கோடி ரூபாயும்,

தேசிய இடைநிலைக் கல்வி இயக்கத்திற்காக 1,139.52 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

✓ 2011 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதுவரை, சிறப்பு ஊக்கத்தொகைத் திட்டத்தின் கீழ் 1,744.38 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக, 2010–2011 ஆம் ஆண்டில் 86.26 சதவீதமாக இருந்த மேல்நிலைக் கல்வி நிறைவு செய்தவர் விகிதம், 2014–2015 ஆம் ஆண்டில் 94.57 சதவீதமாக உயர்ந்துள்ளது.

✓ தரமான கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், 2011 ஆம் ஆண்டு முதல், 12,475 கோடி ரூபாய் செலவில் மாணவ மாணவியருக்கு விலையில்லா மடிக் கணினிகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், கல்வி உபகரணங்கள், நான்கு சீருடைத் தொகுப்புகள், காலணிகள், புத்தகப் பைகள், பேருந்து கட்டணச் சலுகைகள், மிதிவண்டிகள் போன்றவை.

**உயர்கல்வி**

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில் 39 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், நான்கு அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் 11 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்கி செயல்பட்டு வருகிறது. மேலும், மாநிலத்தில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 959 புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளது.

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில், 667.48 கோடி ரூபாய் செலவில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு கல்வியின் தரம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

✓ முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணத்தை திரும்ப வழங்கும் திட்டத்தின் கீழ், கடந்த ஐந்து ஆண்டுகளில் 2,84,609 மாணவர்களுக்கு 2,544 கோடி ரூபாய் வழங்கப்பட்டு, அவர்கள் நிதிச் சுமையின்றி தொடர்ந்து உயர்கல்வி பயின்று வருகின்றனர். இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்துவதற்காக இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 579 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ 2010–2011 ஆம் ஆண்டில் 2,044.74 கோடி ரூபாயாக இருந்த உயர்கல்வித் துறைக்கான நிதி ஒதுக்கீடு 2015–2016 ஆம் ஆண்டில் 3,477.29 கோடி ரூபாயாகவும் உயர்த்தியுள்ளது. இடைக்கால நிதிநிலை அறிக்கையில் 3,821 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.

**சுற்றுலா**

✓ 18.32 கோடி ரூபாய் செலவில் முக்கொம்பு, பச்சமலை, முத்துப்பேட்டை, நன்மங்கலம் மற்றும் டாப் ஸ்டேஷன் போன்ற சுற்றுலாத் தலங்களை சுற்றுச்சூழல் சார்ந்த சுற்றுலாத் தலங்களாக மாற்றவும், வண்டலூர் உயிரியல் பூங்காவிலும் ஸ்ரீரங்கத்திலும் வண்ணத்துப் பூச்சி பூங்காக்கள் அமைக்கவும் நடவடிக்கை.

✓ சுற்றுலாத் துறைக்காக 2016–2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 84.66 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இந்து சமய அறநிலையத் துறை**

✓ பதிமூன்றாவது நிதிக்குழுவின் நிதியுதவியைப் பயன்படுத்தி, கடந்த ஐந்து ஆண்டுகளில், 250 பழமையான கோயில்களைச் சீரமைப்பதற்காக 90 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

✓ அன்னதானத் திட்டத்தின் கீழ், தினந்தோறும் 10.89 இலட்சம் ரூபாய் செலவில் 724 கோயில்களில் பக்தர்கள் பயன்பெறும் வகையில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது.

✓ 12,504 கோயில்களில், 125.04 கோடி ரூபாய் செலவில் ஒருகால பூஜை

✓ 15.91 கோடி ரூபாய் செலவில் 143 கோயில் தேர்களையும், 3.31 கோடி ரூபாய் செலவில் 611 கோயில் குளங்களையும் புதுப்பிப்பதற்கான பணிகள் மற்றும் 8,620 கோயில்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது.

**விளையாட்டு மற்றும் இளைஞர் நலம்**

✓ 2011 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதுவரை, விளையாட்டு மேம்பாட்டிற்காகவும், விளையாட்டு தொடர்பான நடவடிக்கைகளுக்காகவும் 743.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ இத்துறைக்காக, வரும் நிதியாண்டின் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 142.88 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழிலாளர் நலன்**

✓ 2011 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து பல்வேறு அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களின் கீழ் 14,28,027 தொழிலாளர்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதுவரை, 20,83,198 பயனாளிகளுக்கு 540.37 கோடி ரூபாய் நலத்திட்ட உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

✓ ஒன்பது இடங்களில், 106 கோடி ரூபாய் செலவில் 7,000 தொழிலாளர்கள் தங்கக்கூடிய வகையில் தற்காலிக தங்குமிட வசதிக்கான உறைவிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில், தொழிலாளர் நலத் துறைக்காக இந்த அரசு 625.22 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. இத்துறைக்காக இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 152.27 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சமூக நலன்**

✓ திருமண உதவித் திட்டங்களின் கீழ், கடந்த ஐந்து ஆண்டுகளில், 2,537.74 கோடி ரூபாய் பண உதவி பெற்று 7,72,643 பெண்கள் பயனடைந்துள்ளனர். திருமாங்கல்யத்திற்கென 786.64 கோடி ரூபாய் மதிப்பிலான தங்கம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்காக, இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 703 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ சத்துணவுத் திட்டத்திற்காக இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **1,645** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ **601.91** கோடி ரூபாய் செலவில் **15,313** புதிய அங்கன்வாடி மையங்களைக் கட்டியும், **29.52** கோடி ரூபாய் செலவில் குழந்தைகள் பயன்படுத்துவதற்கு உகந்த **16,402** கழிவறைகளை அமைத்தும், **12.34** கோடி ரூபாய் செலவில் **20,558** மையங்களுக்கு மின் இணைப்பு வழங்கியும், **123.93** கோடி ரூபாய் செலவில் **15,399** மையங்களை பழுது பார்த்தும், இம்மையங்களின் தரத்தை இந்த அரசு உயர்த்தியுள்ளது.

✓ **27.35** கோடி ரூபாய் செலவில் **45,211** அங்கன்வாடி மையங்களுக்கும் சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

✓ ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுப் பணிகள் திட்டத்திற்காக இடைக்கால இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **1,696** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில், சமூகப் பாதுகாப்பு உதவித்தொகைகளுக்காக **19,204** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **3,820** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை**

✓ இதுவரை, **31.78** இலட்சம் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது. **2014–2015** ஆம் ஆண்டு வரை, இதற்கென **3,231.74** கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டிற்கு **1,100** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ **2016** ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்குள் **7,755.73** கோடி ரூபாய் செலவில் **1.76** கோடி எண்ணிக்கையிலான விலையில்லா மின்விசிறிகள் அல்லது மின்அடுப்புகள், மிக்சிகள் மற்றும் கிரைண்டர்களை வழங்குதல்.

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்**

✓ ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கும் உயர்கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ், மத்திய அரசு உறுதியளித்தவாறு அதன் பங்காகிய **1,592** கோடி ரூபாயை முழுமையாக இன்னும் விடுவிக்கவில்லை.

✓ **2006–2007** முதல் **2010–2011** ஆம் ஆண்டு வரை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு உயர்கல்வி உதவித்தொகையாக **836** கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டது. ஆனால் கடந்த ஐந்து ஆண்டுகளில், இதற்காக **3,607** கோடி ரூபாய் இந்த அரசால் வழங்கப்பட்டுள்ளது. உயர்கல்வி உதவித்தொகைக்காக, இந்த இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **1,430** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தின் கீழ், **289** கோடி ரூபாய் செலவில்,

8,63,159 மிதிவண்டிகள் கடந்த ஐந்து ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளன. 2016–2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்குவதற்காக 64.86 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்காக 436 கோடி ரூபாயும், திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்களுக்காக 15 கோடி ரூபாயும் தாட்கோ நிறுவனத்தால் செலவிடப்பட்டுள்ளது. 2015–2016 ஆம் ஆண்டில் மத்திய சிறப்பு உதவித் திட்டத்திற்காக (SCA) 130 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. வரும் 2016–2017 ஆம் ஆண்டிற்கும் இதே அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில் 142 கோடி ரூபாய் செலவில் 198 தங்கும் விடுதிகளும், 55 பள்ளிக் கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன.

✓ மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்கான செலவுகளுக்காக இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 103.96 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ 57 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் ஐந்து தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

✓ ஆதி திராவிடர் நலனுக்காக 2,702.22 கோடி ரூபாயும், பழங்குடியினர் நலனுக்காக 261.66 கோடி ரூபாயும் இந்த இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்**

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11வது வகுப்பு பயிலும் மாணவ மாணவியர்களுக்கு 736.81 கோடி ரூபாய் செலவில் 22.18 இலட்சம் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்திற்காக இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 162.83 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ 2011 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதுவரை, பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவர்களுக்கு 100 புதிய தங்கும் விடுதிகள் தொடங்கப்பட்டுள்ளன.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கு தங்கும் விடுதி செலவுகளுக்காகவும், உணவு வழங்குவதற்கான மாதாந்திர உதவித் தொகைக்காகவும் 79.23 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில் 40.08 கோடி ரூபாய் செலவில், 30,538 மாணவர்கள் பயன்பெறும் 290 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கான கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இப்பள்ளிகளுக்காக இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில்

108.76 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சிறுபான்மையினர் நலன்**

✓ தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கான வருடாந்திர நிர்வாக மானியம் ஒரு கோடி ரூபாயாகவும், உலேமாக்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியம் 1,000 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

✓ தமிழ்நாடு ஹஜ் குழுவிற்கு வழங்கப்படும் நிர்வாக மானியமும் 2013–2014 ஆம் ஆண்டு முதல் 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

**மாற்றுத் திறனாளிகள் நலன்**

✓ செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கு 27 மாவட்டங்களிலும், கண்பார்வை பாதிக்கப்பட்டோருக்கு 9 மாவட்டங்களிலும், இக்குறைபாடுகளை ஆரம்பநிலையிலேயே கண்டறிந்து சரிசெய்வதற்கான ஆய்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில், மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக 1,490.83 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ 2010–2011 ஆம் ஆண்டில் 177.69 கோடி ரூபாயாக இருந்த மாற்றுத் திறனாளிகளுக்கான ஆண்டு நிதி ஒதுக்கீடு, 2016–2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் 391.93 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

**அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் நலன்**

✓ புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இதுவரை, 668.52 கோடி ரூபாய் அளவிலான மருத்துவ உதவியை 1,69,622 பயனாளிகள் பெற்று பயனடைந்துள்ளனர். இதற்கான காப்பீட்டுத் தொகைக்காக இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 260.81 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ ஓய்வூதியர்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இதுவரை, 215.32 கோடி ரூபாய் அளவிலான மருத்துவ உதவியை 75,389 ஓய்வூதியர்கள் பெற்றுப் பயனடைந்துள்ளனர். 2016–2017 ஆம் ஆண்டிற்கு, இத்திட்டத்திற்கான காப்பீட்டுத் தொகைக்காக 129 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ ஓய்வூதியம் மற்றும் ஓய்வுகாலப் பலன்களுக்காக 2016–2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 19,841 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வரவு–செலவுத் திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள்**

✓ கடந்த ஒன்றரை ஆண்டுகளில் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை கணிசமாகக் குறைந்துள்ளதால், பெட்ரோலியப் பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைக்கக்கூடிய விற்பனை வரி வருவாயும் பெருமளவு குறைந்து, மாநில அரசின் வரி வருவாயில் ஆண்டுதோறும் சுமார் 4,000 கோடி ரூபாய் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.

✓ 2015–2016 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 86,537.70 கோடி ரூபாயாக உள்ள மாநில சொந்த வரி வருவாய், 2016–2017 ஆம் நிதியாண்டில் 96,531.41 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

✓ 2015–2016 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் கணக்கிடப்பட்டதைவிட, வணிகவரி வருவாய் 11.69 சதவீதம் வளர்ச்சி பெற்று, 2016–2017 ஆம் நிதியாண்டில் 72,326.45 கோடி ரூபாயை எட்டும் என கணிக்கப்பட்டுள்ளது.

✓ மாநில ஆயத்தீர்வை மூலம் கிடைக்கும் வருவாய், வரும் நிதியாண்டில் 7,101.81 கோடி ரூபாயை எட்டும் எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், முத்திரைத் தாள்கள் மற்றும் பதிவுக் கட்டணங்களின் கீழ் கிடைக்கும் வருவாய் 10,548.25 கோடி ரூபாய் எனவும், வாகனங்கள் மீதான வரிகள் 4,925.05 கோடி ரூபாய் எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

✓ இந்த இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மாநிலத்தின் சொந்த வரியல்லாத வருவாய் 9,288.63 கோடி ரூபாய் எனவும், மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு 23,688.11 கோடி ரூபாய் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

✓ பல மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களின் நிதிப் பங்கீட்டு முறை 2015–2016 ஆம் ஆண்டு முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ளதால், 2016–2017 ஆம் ஆண்டில் நமது மாநில அரசிற்கு 1,400 கோடி ரூபாயிலிருந்து 2,000 கோடி ரூபாய் வரை கூடுதல் நிதிச்சுமை ஏற்படும்.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் மானிய உதவி 22,496.08 கோடி ரூபாய் அளவில் மட்டுமே இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**நிதிநிலைக் குறியீடுகள்**

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மொத்த வருவாய் வரவுகள் 1,52,004.23 கோடி ரூபாய் எனவும், மொத்த வருவாய் செலவினங்கள் 1,61,159.01 கோடி ரூபாய் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

✓ வரும் நிதியாண்டில் 9,154.78 கோடி ரூபாய் அளவிலான வருவாய்ப் பற்றாக்குறை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

✓ 2015–2016 திருத்த மதிப்பீடுகளில் நிதிப் பற்றாக்குறை 32,359.59 கோடி ரூபாயாக இருக்கும். இது மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 2.94 சதவீதமாகும்.

✓ 2016–2017 ஆம் ஆண்டில் இப்பற்றாக்குறை 36,740.11 கோடி ரூபாயாக இருக்கும். இது மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 2.92 சதவீதத்திற்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், பதினான்காவது நிதிக்குழு பரிந்துரைத்துள்ள வரையறைகளுக்கு உட்பட்டே இருக்கும்.

✓ வரும் நிதியாண்டில் **37,782** கோடி ரூபாய் வரை கடன் வாங்க மாநிலத்திற்கு தகுதியுள்ள போதிலும், **2016–2017** ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கடன் அளவு **35,129** கோடி ரூபாய் அளவிற்கு குறைக்கப்பட்டுள்ளது.